# 13 கடலும் கிணறும்

கிழவியின் தந்திரம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதனை கி.வா.ஜகந்நாதன் எழுதியுள்ளார். இப்பாடம் அறம் செய்து வாழ்ந்தவர்களுடைய வாழ்க்கையினையும் செல்வத்தினைப் பெருக்கி வாழ்ந்தவர்களுடைய வாழ்க்கையினையும் சித்திரிக்கின்றது. பணம் சேரச் சேர துன்பமே உண்டாகும். ஒருவர் நீடூழி காலம் வாழ்ந்தால் எப்படியாவது தருமத்தினை செய்துகொண்டே இருப்பார் என்ற கருப்பொருளில் அமைகின்றது.



அந்த ஊர் மிகச்சிறியது. ஆனாலும் பெரிய உள்ளங்களைப் பெற்ற உபகாரிகள் சிலர் அதில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய பெருமைகளை உலகுக்குத் தெரிவிப்பதற்காகவே, குறுகிய மனம் உடைய பலரும் அந்த ஊரில் இருந்தார்கள். நல்லவர்களுக்குள் ஒருவர் சில நிலங்களை வைத்துக்கொண்டு தன்னால் முடிந்த அளவுக்கு அறம் செய்து வந்தார். வேறு பலரோ நாளுக்கு நாள் தங்களுடைய செல்வத்தைப்

பெருக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அந்தச் செல்வர்கள் வாழ்வதனால் அந்த ஊருக்குப் புகழ் உண்டாகவில்லை. சின்னக் குடித்தனக்காரராகிய பெரியவர் ஒருவர் இருந்ததனால் வேறு ஊர்களிலிருந்து அவரை நாடி ஏழைகள் வருவார்கள். அந்தப் புலவர்கள் தாங்கள் போகும் இடங்களில் எல்லாம் இந்தப் பெரியவருடைய புகழைப் பரப்பிக் கொண்டே போவார்கள். இதனால் அந்த ஊரினுடைய புகழ் எங்கும் பரவியது. அந்தப் பேருபகாரியான பெரியவருக்குத் தமிழ்மொழியில் ஆர்வம் அதிகமாக இருந்தது. புலவர்களிடம் பாடல்களைக் கேட்டு அவர் இன்பம் அடைவார். தமிழ் மொழியினிடம் அன்பும், தரும சிந்தனையும் ஒன்றாகச் சேர்ந்த அவரிடம் யாருக்குத்தான் அன்பு பிறக்காது?

ஔவையாருடைய காதில் அந்த நல்லவருடைய புகழ் விழுந்தது. நல்ல மனிதர்கள் எங்கே இருந்தாலும் அவர்களைத் தேடிச் சென்று பார்த்துப் பாராட்டுவது அந்தப் பெருமாட்டியின் இயல்பு. அந்த உபகாரியான பெரியவரைப் பார்க்க விரும்பி ஒரு நாள் அவருடைய ஊருக்குப் போனார். ஊருக்குள்ளே நடந்து போனபோது பல பெரிய மாளிகைகளை ஔவையார் கண்டார். ‘‘இந்த மாளிகைகளில் ஒன்றில் தானே அந்தப் பெரியவர் வாழுகிறார்’’ என்று தம்மோடு வந்தவர்களை ஔவையார் கேட்டார்.

‘‘இல்லை அவர் சிறிய வீட்டில் வாழ்கிறார். இந்த மாளிகையில் வாழ்கிறவர்கள், அவரைக் காட்டிலும் பெருஞ் செல்வர்கள்’’ என்று அவர்கள் சொன்னார்கள்.

‘‘இந்த ஊரில் இவ்வளவு பெரிய செல்வர்கள் இருக்கிறார்கள் என்று யாரும் என்னிடம் சொல்லவில்லையே’’ என்றார் அந்தத் தமிழ் மூதாட்டியார். அதற்கு யாரும் விடை ஒன்றும் சொல்லவில்லை.

ஔவையார் அந்தச் செல்வரது வீட்டிற்குச் சென்றார். ஔவையார் வருவதை அறிந்த அந்தச்செல்வர் அவரை எதிர்கொண்டு அழைத்து உபசாரம் செய்தார். ஔவையாரோடு வேறு சில புலவர்களும் வந்திருந்தார்கள். ‘இந்தத் தமிழ் மூதாட்டியாருடைய வாயிலிருந்து எந்தச் சமயத்தில் என்ன முத்து உதிருமோ? அதனை உடனே பொறுக்கிக் கொள்ள வேண்டும் என்று மிகுந்த ஆவலோடு அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் செல்வர் எல்லோருக்கும் அறுசுவைகளை உடைய விருந்துணவை உண்டுவிட்டு, தாம்பூலம் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தனர். அப்போது அந்த ஊர்ப் பெரியவர் ஒருவர் ஔவையாரை நோக்கி, ''தாங்கள் இந்த ஊருக்கு எழுந்தருளியது கலைமகளே எழுந்தருளியது போல் உள்ளது. தங்களைப் போன்ற பெரியவர்கள் இந்தச் சிறிய ஊருக்கு வருவதற்கு நாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ தெரியவில்லை! நாங்கள் செய்த புண்ணியம் என்று சொல்வதற்கில்லை. இந்தப் புண்ணியவான் இந்த ஊரில் வாழ்வதனால்தான் தங்களைப் போன்றவர்கள் இந்த ஊரைத் தேடி வருகிறார்கள்'' என்றார்.

இதற்குள் அந்த உபகாரி, ''தாத்தா, வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள்'' என்றார்.

கிழவர் மேலும் ஔவையாரைப் பார்த்து, ''தாங்கள் தெய்வாம்சம் உடையவர்கள். தங்கள் திருவாக்கால் இந்தப் புண்ணியவானை ஆசீர்வாதம் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்''

ஆனால், அந்தப் பெரியவரோ ஔவையாரைப் பார்த்து, ''என்னிடமுள்ள அபிமானத்தால் அந்தப் பெரியவர் அவ்வாறு பேசுகிறார். இந்த ஊரில் பல பெரிய செல்வர்கள் வாழுகிறார்கள். அவர்களைக் காட்டிலும் நான் மிகவும் சிறியவன். இறைவன் அவர்களுக்கு அளவற்ற செல்வத்தைக் கொடுத்திருக்கிறான். பொதுவாக அவர்களையும் வாழ்த்துவது தான் முறை. அடியேனைத் தனியாக வாழ்த்துவதற்கு என்ன செய்து விட்டேன்?'' என்றார்.

ஔவையார் இதுவரை பேசாமல் இருந்தவர் இப்போது தம்முடைய திருவாயைத் திறந்தார். முன்னர் பேசிய கிழவரைப் பார்த்து, ''இந்த ஊரில் வேறு செல்வர்களும் இருக்கிறார்கள் என்றார்களே. அவர்கள் இவரை விடப் பணக்காரர்களா?'' என்று கேட்டார்.

''ஆமாம் அவர்கள் தங்களுடைய பணத்தைச் செலவழிக்காமல் மேலும் மேலும் சேர்த்துக் கொண்டே வருகிறார்கள். ஆனால் இவருக்கோ பணத்தைச் செலவழிக்கத் தெரியுமே ஒழியச் சேர்க்கத் தெரியாது. அதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்வேன்' என்றார்.

‘‘அப்படியா! ஏதாவது ஒன்று சொல்லுங்கள் கேட்கிறேன்’’ என்று உபகாரி சொன்னார்.

‘‘செல்வத்தை வேறு யாராவது துன்புறுத்தி அடித்துக் கொண்டு போய்ச் செலவழிப்பார்கள். ஆனால் இவரிடம் எந்தத் திருடனும் வர நினைக்கமாட்டான். இவர் நீடூழி காலம் வாழ்ந்தால் எப்படியாவது தருமத்தைப் புரிந்து கொண்டே இருப்பார். பணக்காரர்கள் தங்களிடம் பணம் சேர்வதனால் வரும் துன்பங்களைத் தருமம்செய்து போக்கி கொள்ளலாம். அவ்வளவு செய்யாதவர்களுக்குப் பணம் சேரத் துன்பமும் உடனே வந்துசேரும்’’ என்றார் ஔவையார், அதனால் அவர்களுக்குத் துன்பம் உண்டாகட்டும் என்று சபிக்கவில்லை. இன்னும் பணம் சேரட்டும் என்று சொன்னார்.

**கி.வா. ஜகந்நாதன்.**

**அரும்பதங்கள்**

தாம்பூலம் - வெற்றிலை, பாக்கு
உபகாரி - உதவுபவர், நன்மை செய்பவர்
கலைமகள் - நாமகள், சரசுவதி
திருவாக்கு - தெய்வப் பெரியோர்களின் வாய்மொழி
ஆசீர்வாதம் - வாழ்த்து
நீடூழி காலம் - நெடுநாள், நெடுங்காலம்

**கிரகித்தல் பயிற்சி**

1. அந்த மிகச் சிறிய ஊரில் வாழ்ந்து வந்தவர்கள் யாவர்?
2. பேருபகாரியான பெரியவர் மீது மற்றவர்கள் அன்புகொள்ளக் காரணம் என்ன?
3. ஔவையாரின் இயல்பான பண்பாக நாம் குறிப்பிடக் கூடியது யாது?
4. எதிர்கொண்டு அழைத்து உபசாரம் செய்தல் என்றால் என்ன?
5. பணம் சேர்வதனால் வரும் துன்பங்களை பணக்காரர் எவ்விதம் போக்கிக்கொள்ள முடியும்?
6. சந்தர்ப்பங் கூறி விளக்குக.

   அ. இந்த ஊரில் வேறு செல்வர்களும் இருக்கின்றார்கள என்றார்களே அவர்கள் இவரைவிடப் பணக்காரர்களா?

   ஆ. தாங்கள் இந்த ஊருக்கு எழுந்தருளியது கலைமகளே எழுந்தருளியது போல் உள்ளது.

பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் எழுதுக.

அ. அறு சுவை　　ஆ. பேருபகாரி　　இ. தமிழ் மூதாட்டி

ஈ. தெய்வாம்சம்　　உ. நீடூழி காலம்

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

அறம் செய்தால் கிடைக்கும் பயன் பற்றி கலந்துரையாடி, கதை ஒன்று ஆக்குக.

# விளம்பரம்

★ தகவல்களை இலகுவாகப் பெற முடியும்.
★ விளம்பரம் ஒன்றைச் செய்வதனால் விற்பனை அதிகரிக்கும்.
★ பாவனையை அறிந்துகொள்ள முடியும்.
★ பொருள்களின்மீது நாட்டத்தினை ஏற்படுத்த முடியும்.




# துண்டுப் பிரசுரம்

★ ஒரு விடயம் பற்றி அறிவுறுத்தப்படுவதை அறிய முடியும்.
★ கொள்கை கோட்பாடுகளை வெளிப்படுத்த முடியும்.
★ வேண்டுகோள் விடுக்க முடியும்.




**பயிற்சி**

1. ஆசிரியரின்துணையுடன்விளம்பரம்,துண்டுப்பிரசுரம்ஆகியவற்றுக்கான விளக்கத்தை மேலும் பெறுக.
2. உமக்கு விருப்பமான தலைப்பொன்றில் விளம்பரம் ஒன்றை ஆக்குக.
3. உமக்கு விருப்பமான தலைப்பொன்றில் துண்டுப் பிரசுரம் ஒன்றை ஆக்குக.

# இரட்டைமொழி

இசை பற்றியும் பண்பு பற்றியும் குறிப்புப் பற்றியும் அடிச் சொல் இரட்டித்து முழு உருவத்தோடு நிற்பது இரட்டை மொழியாகும். இவ்வாறான இரட்டை மொழிச் சொல் தனித்து நின்று பொருள் தராது.

- ★ கசகச
- ★ மடமட
- ★ குடுகுடு
- ★ விடுவிடு
- ★ எடுஎடு

# இணைமொழி

எதுகை மோனை எனும் ஓசைநயம் பற்றியும் எதிர்க் கருத்துப் பற்றியும் இருசொற்களும் இணைந்து பொருட் செறிவுடையனவாய் வருவது இணைமொழியாகும்.

- ★ அருமைபெருமை
- ★ ஒழிப்புமறைப்பு
- ★ விருப்புவெறுப்பு

**பயிற்சி**

கீழ்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

1. திடுதிடு
2. மளமள
3. தடுதடு
4. கண்ணீரும் கம்பலையும்
5. விருப்புவெறுப்பு
6. தட்டுத்தடுமாறி